**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 4 of 2024 |

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : பெருமாள்

Father's Name : த/பெ. சுப்பன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of June** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

முதல்விசாரணை

1. நான் தற்போது நல்லூர்பாளையத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். புகார்தாரார் சுப்பாள் என்னுடைய அம்மா ஆவார். எதிரி மோகன்ராஜ் எங்களுடைய ஊரை சேர்ந்தவர். மேலும் அவருடன் நான் வேலைக்கு சென்றதன் மூலம் அவரை எனக்கு தெரியும்.

2. நான் எதிரியிடம் ரூ.5 ஆயிரம் கடனாக வாங்கியிருந்தேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 5, 6 மாதங்களுக்கு முன்னர் ஒரு நாள் எதிரி எங்களுடைய வீட்டிற்கு வந்து

பணத்தை திருப்பி கேட்டு கொச்சை வார்த்தைகளால் திட்டினார். நான் பிள்ளைகள் இருக்கார்கள் ஏன் இப்படி திட்டுகிறீர்கள் என்ற கேட்டேன் அவர் போய்விட்டார். மறுநாள் காலை என்னுடைய அம்மா ராசு கவுண்டர் டீ கடைக்கு சென்றிருந்தபோது எதிரி என்னுடைய அம்மாவிடம் நான் கொடுக்க வேண்டிய பணம் குறித்து கூறியிருக்கிறார். அதற்கு என் அம்மா என் பையன் கொடுக்க வேண்டிய பணத்தை அவனிடம் கேளுங்கள் என்னு கூறியிருக்கிறார். அதற்கு எதிரி என் அம்மாவை பார்த்த கண்டாரோழி என்று திட்டியிருக்கிறார்.

3. மேலும் திமிராக பேசுகிறாயா என்று கூறி என் அம்மாவின் கையை பிடித்து திருவி விட்டார். அகிலிருந்தவர்கள் வருவதை பார்க்கவும் எதிரி அங்கிருந்து சென்று விட்டார். என் அம்மா வீட்டிற்கு வந்த மோகன்ராஜ் கையை திருப்பி விட்டார் என்று கூறவும் என் அம்மாவை பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என் அம்மாவை உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அதன்பின்னர் என் அம்மாவிடம் சுல்தான்பேட்டை போலீசார் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என் அம்மாவிற்கு இடது கை மணிக்கட்டில் எலும்பில் கீரல்(மூச்சுவிட்டுறுச்சு) ஏற்பட்டு விட்டது. 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. நான் பஞ்சு வேலைக்கு யார் கூப்பிட்டாலும் செல்வேன். எதிரி மோகன்ராஜும் பஞ்சு வியாபாரம் செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் எதிரியிடம் எந்த தேதியில் 5 ஆயிரம் கடன் வாங்கினேன் என்றால் தேதி தெரியாது. முதல் விசாரணையில் சாட்சியம் அளித்திருப்பது போன்று தான் போலீஸ் விசாரணையிலும் கூறியிருக்கிறேன். முதல் நாள் இரவு எதிரி வீட்டிற்கு வந்து சத்தம்போட்டது குறித்து புகார் ஏதாவது அளித்துள்ளேனா என்றால் அளிக்கவில்லை.

2. என் அம்மா கூறியதன் பேரில் தான் வழக்கு சம்பவம் குறித்து எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கு கொடுக்கவேண்டிய பணத்தை கொடுக்காமல் இருப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**